MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# ஈஞ்சநாடு ஈஸ்வரன் கோயில் வரலாறும் சிறப்பும்

முனைவர் திருமதி **வீ.முத்துலட்சுமி**
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி ,சிவகாசி - 626 123
DOI 10.5281/zenodo.18518281.

**Abstract :**

Our ancestors sailed across the seas in search of wealth. They then generously distributed it for the welfare of others. They performed great deeds such as building temples, digging ponds, and planting trees, thus finding joy themselves and bringing joy to those around them. Through temples, the livelihoods of various people improved both directly and indirectly. Moreover, people considered the deities as a power greater than themselves, a force that guided their lives. Therefore, they lived by the principle of not settling in a village without a temple, and deeply ingrained in their minds the belief that divine justice would prevail. Thus, they lived upholding righteousness even in times of conflict. Today's practical life is characterized by excessive mechanization. Western education, while contributing to our economic and social development, has also dulled our sense of humanity. In the media, we see numerous instances of young people going astray. To liberate people from this situation, and with the aim of reminding them of faith in God and the immeasurable services rendered by our ancestors to temples, this article, "The History and Significance of the Injinaadu Eswaran Temple," is presented.

**KeyWords :** Temple – History – Conflict – Economy

### முன்னுரை

நம் முன்னோர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடினர் .அதனை அடுத்தவர் நலனுக்காகவே அள்ளியிரைத்தனர் .கோயில்கட்டல்,குளங்களைவெட்டல்,மரங்களை நட்டல் போன்ற மகத்தான செயல்களைச் செய்து தானும் மகிழ்ந்து தன்னைச் சார்ந்தோரையும் மகிழச் செய்தனர் . கோயில்கள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறுபட்ட மக்களின் வாழ்வாதாரம் சிறந்தது.மட்டுமன்றி மக்கள் தனக்கு மிஞ்சிய சக்தியாக தம்மையியக்கும் சக்தியாக தெய்வங்களை நினைத்தனர். எனவே கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றகொள்ளையுடையவராகவும், தெய்வம் நின்று கொல்லும் என்னும் கருத்தை தம்மனதில் ஆழமாகப் பதித்தும் வாழ்ந்தனர் .எனவே மறத்திலும் அறத்தைக் கடைபிடித்து வாழ்ந்தனர் . இன்றைய நடைமுறை வாழ்க்கை இயந்திரத்தன்மை மிகுத்துக் காணக்கிடக்கின்றது . மேலைநாட்டுக் கல்வி நம் பொருளாதார, நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டதோடு மட்டுமல்லாது நம்முடைய மனிதநேயச் செயல்பாடுகளையும் மழுங்கடித்து விட்டது . ஊடகங்களில் நாம் இளையோர் தடம் மாறிச் செல்லும் தன்மையை மிகுதியாகக் காணஇயலுகின்றது . இந்நிலையிலிருந்து மக்களை விடுவிக்க , இறை நம்பிக்கையையும் நம்முன்னோர்கள் கோயிலுக்காற்றிய அளப்பறிய செயல்களையும் ஞாபகப்படுத்தும் நோக்கில் “ஈஞ்சநாடு ஈஸ்வரன் கோயில்வரலாறும் சிறப்பும்” எனும் இக்கட்டுரையானது அமைய இருக்கின்றது.

### ஊரின் தொன்மை


http://Creativecommons.org//license/by/4.0/.

திருவில்லிப்புத்தூர் சிவகாசி நெடுஞ்சாலையில் சுமார் 5 கி.மீ.தொலைவில் உள்ள ஊர் ஈஞ்ச நாடு எனும் மிகப் பழமையான ஊராகும் . கல்வெட்டுக்களில் இவ்வூர் "தடங்கண்ணிச் சிற்றூர்"எனக் குறிக்கப்பட்டுள்ளது . மத்திய கற்காலத்தைச் சார்ந்த நுண்கற்கருவிகள் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன.இவ்வூரின் வயல் சார் பகுதிகளில் கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் ,முதுமக்கள் தாழிகளின் விளிம்புப்பகுதிகள் ,ஓடுகள் காணப்படுகின்றன. தொல்லியலாளர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு நாகரிக மேம்பாட்டுடன் வாழ்ந்த மக்களின் தடயங்கள் என இவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

**கோயில் தொன்மையும் வரலாறும்**

ஈஞ்ச நாட்டில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று மீனாட்சிஅம்மன் கோயில். மற்றொன்று ஆலடி ஈசுவரர் கோயில் . மக்கள் மீனாட்சி அம்மன் என அழைத்தாலும் கல்வெட்டுக்களில் அம்மையின் பெயர் "தடங்கண்ணி அம்மன்" (தட - பெரிய, கண்ணி- கண்களை உடையவள் அதாவது பெரிய கண்களைக் கொண்ட மீனாட்சி அம்மை) எனப்பதிவு பெற்றுள்ளது.பண்டைய ஊர்ப் பெயர்கள் இயற்கையின் பெயராலேயே அமைவதும் கோயில்களின் வருகைக்குப்பின் கடவுளர் பெயரால் மாறுவதும் தமிழக ஊர்ப் பெயர்களின் பின்னணியாகும். இத்தகு அமைப்பில் முதலில் இயற்கையான ஈச்சமரத்தின் பெயரால் ஈஞ்சார் என்றும் பின் கடவுள் பெயரால் "தடங்கண்ணிச் சிற்றூர்" என்றும் பெயர் மாறியுள்ளதை "ஈஞ்சார் ஊரிலும் பொருத்திப் பார்த்திப் பார்க்க முடிகின்றது.

**கோயில் கட்டிய காலம்**

சுந்தர பாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில் என்று மன்னன் பெயரில் குறிக்கப் பெற்றுள்ளது. இக்கோயில் தடங்கண்ணியில் (ஈஞ்சார்) வாழ்ந்த சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் என்னும் பாண்டிய மன்னனின் அதிகாரி தலைமையில் எடுக்கப் பெற்றுள்ளது.

**தலச்சிறப்பு**

ஈஞ்சநாடு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கி .பி.1224 இல் உருவான சுந்தர பாண்டிய ஈசுவரமுடையார் கோயிலும் அதற்குத் தென் பகுதியில் அமைந் துள்ள ஆலடி ஈஸ்வரன் கோயிலும் அமைந்துள்ளது . மிகப்பெரிய ஆலமரத்தடியைச் சார்ந்து இக் கோயில் அமைந்திருப்பதால் மரத்தின் பெயரிணைவோடு இறைவன் சுட்டப்படுகின்றார் . இக்கோயிலில் கிழக்குப் பார்த்து மூன்று அறைகளும் ,தெற்குப் பார்த்து மூன்று அறைகளும் வடக்குப் பார்த்து மூன்று அறைகளும் உள்ளன.கிழக்குப் பார்த்த அறையில் சிவனும் சிவகாமி அம்மனும் கருவறைத் தெய்வங்களாக உள்ளனர்.இந்த ஒன்பது அறைகளிலும் மூலிகை ஓவியங்கள் சுவரோவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.இவற்றின் உருவ அமைதியைக் கொண்டு இருநூறு ஆண்டுகள் பழமைமிக்க ஓவியங்களாகக் கருதுகின்றனர். இக்கோயில்களில் கற்றளி, கல்வெட்டு, ஓவியங்கள், பரிவாரத் தெய்வங்கள் ஆகிய அனைத்தும் சிறப்பான முறையில் அமைந்துள்ளன . இராஜபாளையத்தைச் சார்ந்த திரு .சுப்பிரமணியம் செட்டியார் அவர்களால் கொல்லம் ஆண்டு 1079(சொபகிருது வருடம்)ஐப்பசி-24-(09.11.1903) திங்கட்கிழமை வழிநடைச் சிந்து ஒன்று இயற்றப்பட்டுள்ளது.

**கோயில் கட்டடக்கலை**


http://Creativecommons.org//license/by/4.0/.

ஈஞ்சாரில் உள்ள கோயில் “ஷடங்க“ விமானக் கோயில் ஆகும் . “ஷடங்க விமானம் என்பது ஆறு உறுப்புக் (அதிட்டானம் (பாதம்),பித்தி (கால்), பிரஸ்தரம் (தோள்),கிரிவம் (கழுத்து), சிகரம்(தலை),கலவம்(முடி) கோயிலாகும்.இந்த ஆறு உறுப்புகளில் பிரஸ்தரம் வரை மட்டுமே பழைய கட்டுமானம் உள்ளது . இன்று அதனைப் புதிப்பித்துள்ளனர் . ஈஸ்வரன் கோயில் கட்டடக் கலையினை ஆராய்வதாக அமையும்.

**கோயில் இறையிலி நிலதானம்**

நிலம் அளந்து தரம் வாரியாக வரி விதிக்கும் போது ஊரின் சில இடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டன. அதனைக் கல்வெட்டுக்கள் “இறையிலி” என்ற பெயரில் அழைத்தன. கோயில்,குளம்,ஊருணி,நந்தவனம்,ஓடை,சுடுகாடு, வழிகள்(சாலைகள்) ஊர்ப்பொது நிலம் போன்றனவற்றிற்கு வரிவிலக்கு தரப்பட்டன.

**நிலவரிகள்**

அரசியல் அதிகாரிகளால் அளக்கப்பட்ட நிலங்களைத் தரம்வாரியாகப் பிரித்து நில வரி வசூலித்தனர்.இதனை ”இறை” என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

நிலவரிகள், “கடமை”, ”காணிக்கடன்”, என்ற பெயரிலும் வழங்கப்பட்டன. இவ்வூர்க் கல்வெட்டில், ”மாத்தால் நெல்லு இருகலனே தூணி - பதக்கு” எனவும், குறுவை விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று பாதியும் கடமை இறுப்போம்” எனவும் வரக் காணலாம்.

**அரசியல் அதிகாரிகளின் பெயர்கள்**

கல்வெட்டுக்கள் அரசியல் அதிகாரிகளைக் குறிப்பிடும் போது இவ்வூரினன் பாண்டிய அரசனின் அதிகாரி தடங்கண்ணி சிற்றூருடையான் சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையான் பெயரைக் குறிப்பிட்டுள்ளது . இவனேயன்றிப் பிற பெயருக்கு முன்னர் நாட்டின் பிரிவு,ஊரின் பெயர்,சிறப்புப் பெயர் ஆகியவற்றையும் சேர்த்துக் கூறுவது மரபு.

மதுரோதைய வளநாட்டு காளை இருக்கை
உழக்குடி முத்தன்”
“செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணிநல்லூர் விரதம்
முடித்தானான குருகுலராயன்”
“அண்டநாட்டு பெருமணலூர் மந்திரி இராமனான
பல்லவரையன்”

முதலான அதிகாரிகள் இங்குள்ள கல்வெட்டில் கையொப்பமிட்டுள்ளனர்.

**வழிபாட்டு முறைகள்**

கோயில்களில் நாள்தோறும் வழிபாடுகள் நடத்தப்பட்டன . இவ்வழிபாடுகள் “நாள் வழிபாடுகள்” என்றழைக்கப்பட்டன. ஈஞ்ச நாடு சிவன் கோயில்களில் நடைபெறும் நாள் வழிபாடுகள் திருப்படிமாற்று எனும் கல்வெட்டு வழக்கால் அறியமுடிகிறது .இன்று கோயில் கட்டுமானம் புதுப்பிக்கப்பட்டு தினசரி நடைபெறும் வழிபாடுகள் , பிரதோஷ கால வழிபாடுகள் ,அமாவாசை,


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

பௌர்ணமி கால வழிபாடு, சிவராத்தி சிறப்பு வழிபாடு ,மீனாட்சி திருக்கல்யாண வழிபாடு, ஆடிப்பூரம் அம்மனுக்கு வளையல் அணிவிக்கும் விழா வழிபாடு முதலான வழிபாட்டு நிகழ்வுகளைக் காணமுடிகிறது.

**கோயில்களும் சமூக சீர்திருத்தமும்**

இன்றைய காலத்தில் பொய்யும் வழுவும் பெருகிக் காணக்கிடக்கின்றன . கூட்டுக்குடும்ப சீர்குலைவு, கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகும் கட்டாயத்தில் இருத்தல் , ஊடகங்களின் அதிக அளவிலான உணர்வுகளின் மீதான ஆதிக்கம் ஆகியவை இன்றைய இளைய சமுதாயத்தினரை தடம் மாற ச் செய்கின்றது . தனிக்குடும்பம் என்பதையும் மீறி இன்று கணவனும் மனைவியும் விவாகரத்து செய்யும் சூழலில் குழந்தைகள் இருவரில் ஒருவருடன் மட்டும் வாழும் நிலையையும் காணமுடிகிறது . பெற்றோரின் மறுமணம் பிள்ளைகளின் மனதையும் பாதிப்பதாக உள்ளது. பள்ளிகளில், குடும்பங்களில் மா ணவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் கிடைத்தால் மட்டுமே இச்சூழல் மாற இயலும் . ஆகவே இன்றைய மக்கள் மனதில் தெய்வநம்பிக்கையையும் அறச்சிந்தனையையும் மிகுக்கச் செய்ய வேண்டியுள்ளது .அறவாழ்க்கையை மீட்டுக் கொண்டு வரவேண்டுமாயின் தெய்வ நம்பிக்கை எனும் நல்வித்திட வேண்டும் . அதற்கு உதவும் வகையில் இவ்ஆய்வு அமைய இருக்கின்றது.

**தொகுப்புரை**

பண்டைகால மக்களின் வாழ்க்கை முறையினை அறிய உதவும் ஆவணங்களில் மிகச் சிறந்தது கோயில்கள் ஆகும் .நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற மிக உன்னதமான கலைப் பொக்கிஷமாக கோயில்கள் திகழ்கின்றன .சிற்பம்,ஓவியம்,இசை போன்ற இன்னபிற கலைகளின் உறைவிடமாகத் திகழ்வதும் கோயில்களே ஆகும் .நம் மூதாதையர் வாழ்ந்த சமுகப் பின்புலம்,ஆட்சியாளர்கள்,வேளாண்மை,கலாச்சாரப் பண்பாடுச் செய்திகளைக் கோயில்கள் தம்முள் பொதித்து வைத்துள்ளன . அவ்வகையில் சிவகாசிக்கு அருகில் ஈஞ்சார் (ஈஞ்சநாடு) கிராமத்தில் அமைந்துள்ள கி .பி.1224 இல் உருவான சுந்தர பாண்டிய ஈசுவரமுடையார் கோ யிலும் அதற்குத் தென் பகுதியில் அமைந்துள்ள ஆலடி ஈஸ்வரன் கோயிலும் கருத்தாக்கப் பொருள்களாக எடுத்துக் கொள்ளப் படுகிறது . அக்கோயில்களின் சிறப்புக்கள் ,கற்றளி, கல்வெட்டு, ஓவியங்கள், பரிவாரத் தெய்வங்கள், இறையிலி நிலங்கள் ,வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் அடிப்படையி ல் இந்தக் கட்டுரையானது எழுதப்பட்டு இருக்கின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1.கோவிந்தன்,சி.,கல்வெட்டுக் கலைச்சொல் அகர முதலி,மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,1987.

2.செந்தில் செல்வக்குமரன்,மா., சந்திரவாணன், சொ.,(காப்பாச்சியர்), விருதுநகர் மாவட்ட வரலாறு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,தரமணி,சென்னை.2001.

3. நளாயினி,சீ.,மல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூர்-ஈஞ்சார் ஓர் ஆய்வு


http://Creativecommons.org//license/by/4.0/.

4. ஸ்ரீதர்,ஸ்ரீ., இ.ஆ.ப, விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்,தொகுதி- 2,தமிழ்நாடு தொல்லியல்துறை,சென்னை 2009.


http://Creativecommons.org//license/by/4.0/.